| சாட்சி : PW1<br>முத்துராசு | அ.வ.எண். 13/2021 | 21.03.2024 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்தின் சர்வே எண், 277 ஆகும். மொத்தம் விஸ்திரணம் 3 ஏக்கர் 6 செண்ட் ஆகும். எனக்கு வழக்குரை சொத்து விவரத்தில் 3 ஏக்கர் 9 செண்ட் என சொல்லி இருப்பது தவறு என்றால் சரியல்ல, 3 ஏக்கர் 9 செண்ட் தான் விஸ்திரணம். சர்வே எண், 277 ல் உள்ள சொத்தை பெரியசாமி பெயரில் கூட்டு குடும்பமாக கிரையம் வாங்கினோம். பெரியசாமி மீனாட்சியம்மாளிடமிருந்து மேற்படி சொத்தை ரூ.2000/–திற்கு கிரையம் பெற்றார். பெரியசாமி எப்போது வழக்கு சொத்தை 1958 ம் வருடம் கிரையம் பெற்றார். தேதி மாதம் எனக்கு தெரியாது. 1958 ல் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது எனது அப்பாவிற்கு தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். வா.சா.ஆ–1 ஆவணத்தில் பெரியசாமி கூட்டுக்குடும்பமாக இருந்தபோது கிரையம் பெறப்பட்டதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளதாக என்றால் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது தான் கிரையம் பெறப்பட்டது. பெரியசாமி தான் மீனாட்சியம்மாளிடம் ரூ.2000/– கிரைய தொகை குடுத்து பதிவு செய்தார் என்றால் சரிதான். 4 , 5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெரியசாமி என்றால் சரிதான். எனது அப்பா மாசியும், பெரியசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். எனது அப்பாவும் பெரியசாமியும் அவர்களது குடும்ப சொத்தை 1964 ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள். வா.சா.ஆ–2 ஆவணத்தில் சர்வே எண். 277 என குறிப்பிட்டு பின்னிட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எப்போது

வழங்கப்பட்டது என்பதற்கான தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பட்டா எந்த வட்டாட்சியரால் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது எனது அப்பாவிற்கு தெரியும். நான் எத்தனை சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 ஏக்கர் 53 சென்டிற்கு வழக்கு போட்டுள்ளேன். மேற்படி 1 ஏக்கர் 53 சென்ட் எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா எண். 87 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணங்களில் பென்சிலில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையொப்பமும் பென்சிலில் தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணங்கள் அனைத்தும் நகல் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவும் பெரியசாமியும் 1954ம் வருடமே குடும்பசொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றும், அதன்பிறகு 1958ல் பெரியசாமி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றதுதான் வழக்கு சொத்து என்றும் அதில் எனக்கோ எனது அப்பாவிற்கோ தனிப்பட்ட முறையில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை எனது அப்பா சாகுபடி செய்து வந்ததற்கான சாகுபடி அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாகுபடி செய்துவந்தார். எனது தகப்பனாருக்கு வழக்குசொத்தில் பாத்தியமே இல்லை என்பதால் தான் என் அப்பா பெயரிலும், என் பெயரிலும் எவ்வித வருவாய் ஆவணங்களும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பெரியசாமி 1980ல் இறந்துவிட்டார். நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழக்குசொத்தை அளந்து 4,5

பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தவறுதலாக ஏற்பட்டுள்ளது. வழக்கு சொத்தை தவிர மற்ற சொத்துக்களின் பட்டா எனது பெயரில் உள்ளது. பெரியசாமி 1958 ல் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் 4, 5 பிரதிவாதிகள் வசம் தான் உள்ளது என்றால் சரிதான்.

4 , 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 04.04.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.